ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 7.2 – கங்குலும் பகலும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.2 – கங்குலும் பகலும்

‡ கங்குலும் பகலும் கண் துயில் அறியாள் ⋆
கண்ண நீர் கைகளால் இறைக்கும் ⋆
சங்கு சக்கரங்கள் என்று கை கூப்பும் ⋆
தாமரைக் கண் என்றே தளரும் ⋆
எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டென்னும் ⋆
இரு நிலம் கை துழா இருக்கும் ⋆
செங்கயல் பாய் நீர்த் திருவரங்கத்தாய் ! ⋆
இவள் திறத்தென் செய்கின்றாயே ‖ **7.2.1** ‖

என் செய்கின்றாய் என் தாமரைக் கண்ணா ! என்னும் ⋆
கண்ணீர் மல்க இருக்கும் ⋆
என் செய்கேன் எறி நீர்த் திருவரங்கத்தாய் என்னும் ⋆
வெவ்வுயிர்த்துயிர்த்துருகும் ⋆
முன் செய்த வினையே ! முகப்படாய் என்னும் ⋆
முகில் வண்ணா ! தகுவதோ என்னும் ⋆
முன் செய்திவ்வுலகம் உண்டுமிழ்ந்தளந்தாய் ! ⋆
எங்கொலோ முடிகின்றதிவட்கே ‖ **7.2.2** ‖

வட்கிலள் இறையும் மணிவண்ணா ! என்னும் ⋆
வானமே நோக்கும் மையாக்கும் ⋆
உட்குடை அசுரர் உயிர் எல்லாம் உண்ட ⋆
ஒருவனே ! என்னும் உள் உருகும் ⋆
கட்கிலீ ! உன்னைக் காணும் ஆறருளாய் ⋆

காகுத்தா ! கண்ணனே ! என்னும் ⋆
திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய் ! ⋆
இவள்திறத்தென் செய்திட்டாயே ‖ **7.2.3** ‖

இட்ட கால் இட்ட கைகளாய் இருக்கும் ⋆
எழுந்துலாய் மயங்கும் கை கூப்பும் ⋆
கட்டமே காதல் என்று மூர்ச்சிக்கும் ⋆
கடல் வண்ணா ! கடியை காண் என்னும் ⋆
வட்ட வாய் நேமி வலங்கையா ! என்னும் ⋆
வந்திடாய் என்றென்றே மயங்கும் ⋆
சிட்டனே ! செழு நீர்த் திருவரங்கத்தாய் ! ⋆
இவள்திறத்தென் சிந்தித்தாயே ‖ **7.2.4** ‖

சிந்திக்கும் திசைக்கும் தேறும் கை கூப்பும் ⋆
திருவரங்கத்துள்ளாய் ! என்னும் வந்திக்கும் ⋆
ஆங்கே மழைக் கண்ணீர் மல்க ⋆
வந்திடாய் என்றென்றே மயங்கும் ⋆
அந்திப்போதவுணன் உடல் இடந்தானே ! ⋆
அலை கடல் கடைந்த ஆரமுதே ⋆
சந்தித்துன் சரணம் சார்வதே வலித்த ⋆
தையலை மையல் செய்தானே ! ‖ **7.2.5** ‖

மையல் செய்தென்னை மனம் கவர்ந்தானே ! என்னும் ⋆
மா மாயனே ! என்னும் ⋆
செய்ய வாய் மணியே ! என்னும் ⋆
தண் புனல் சூழ் திருவரங்கத்துள்ளாய் ! என்னும் ⋆
வெய்ய வாள் தண்டு சங்கு சக்கரம் வில் ஏந்தும் ⋆
விண்ணோர் முதல் ! என்னும் ⋆

பை கொள் பாம்பணையாய் ! இவள் திறத்தருளாய் ⋆
பாவியேன் செயற்பாலதுவே ॥ **7.2.6** ॥

பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய் ! ⋆
பற்றிலார் பற்ற நின்றானே ⋆
கால சக்கரத்தாய் ! கடல் இடம் கொண்ட ⋆
கடல் வண்ணா ! கண்ணனே ! என்னும் ⋆
சேல் கொள் தண் புனல் சூழ் திருவரங்கத்தாய் ! என்னும் ⋆
என் தீர்த்தனே ! என்னும் ⋆
கோல மா மழைக் கண் பனி மல்க இருக்கும் ⋆
என்னுடைக் கோமளக் கொழுந்தே ॥ **7.2.7** ॥

கொழுந்து வானவர்கட்கென்னும் ⋆
குன்றேந்திக் கோ நிரை காத்தவன் ! என்னும் ⋆
அழும் தொழும் ஆவி அனல வெவ்வுயிர்க்கும் ⋆
அஞ்சன வண்ணனே ! என்னும் ⋆
எழுந்து மேல் நோக்கி இமைப்பிலள் இருக்கும் ⋆
எங்ஙனே நோக்குகேன் என்னும் ⋆
செழுந் தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய் ! ⋆
என் செய்கேன் என் திருமகட்கே ॥ **7.2.8** ॥

‡ என் திருமகள் சேர் மார்பனே ! என்னும் ⋆
என்னுடை ஆவியே ! என்னும் ⋆
நின் திரு எயிற்றால் இடந்து நீ கொண்ட ⋆
நிலமகள் கேள்வனே ! என்னும் ⋆
அன்றுருவேழும் தழுவி நீ கொண்ட ⋆
ஆய்மகள் அன்பனே ! என்னும் ⋆

தென் திருவரங்கம் கோயில் கொண்டானே ! ⋆
தெளிகிலேன் முடிவிவள் தனக்கே ‖ **7.2.9** ‖

முடிவிவள் தனக்கொன்றறிகிலேன் என்னும் ⋆
மூவுலகாளியே ! என்னும் ⋆
கடி கமழ் கொன்றைச் சடையனே ! என்னும் ⋆
நான்முகக் கடவுளே ! என்னும் ⋆
வடிவுடை வானோர் தலைவனே ! என்னும் ⋆
வண் திருவரங்கனே ! என்னும் ⋆
அடி அடையாதாள் போல் இவள் அணுகி அடைந்தனள் ⋆
முகில் வண்ணன் அடியே ‖ **7.2.10** ‖

‡ முகில் வண்ணன் அடியை அடைந்தருள் சூடி உய்ந்தவன் ⋆
மொய் புனல் பொருநல் ⋆
துகில் வண்ணத் தூ நீர்ச் சேர்ப்பன் ⋆
வண் பொழில் சூழ் வண் குருகூர்ச் சடகோபன் ⋆
முகில் வண்ணன் அடிமேல் சொன்ன சொல் மாலை ⋆
ஆயிரத்திப் பத்தும் வல்லார் ⋆
முகில் வண்ண வானத்திமையவர் சூழ இருப்பர் ⋆
பேர் இன்ப வெள்ளத்தே ‖ **7.2.11** ‖

அடிவரவு — கங்குலும் என் வட்கிலள் இட்டகால் சிந்திக்கும் மையல் பாலதுன்பங்கள் கொழுந்து என் முடிவு முகில்வண்ணன் வெள்ளை

கங்குலும் பகலும் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்